*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைப் பேச அனுமதித்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைப் பேச அனுமதித்த பிறகு நீங்கள் பேசிக்கொண்டிருந்தால் நன்றாக இருக்காது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

*மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேச அனுமதித்து இருக்கிறீர்கள். நீங்கள் என்னைப் பேச அனுமதித்தபோதே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், என்னைப் பேச அனுமதிக்காமல், அவரே பேசிக்கொண்டு இருக்கிறார். யாரைப் பேச அனுமதிப்பது என்பது மாண்புமிகு பேரவைத் தலைவருடைய அதிகாரம். அதை மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அறியாமல் . . . (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேச அனுமதித்து இருக்கிறீர்கள். (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திருநாவுக்கரசு, நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) திருநாவுக்கரசு நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) உட்காரவில்லை என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) உட்காரவேண்டும் அல்லது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) திருநாவுக்கரசு நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். நான் வருவாய்த் துறை அமைச்சரைப் பேச அழைத்து அவர் பேசும்போது (குறுக்கீடு) திருநாவுக்கரசு உட்கார வேண்டும்; திருநாவுக்கரசு உட்கார வேண்டும்; திருநாவுக்கரசு உட்கார வேண்டும். (குறுக்கீடு) திருநாவுக்கரசு அவையை விட்டு வெளியேற வேண்டும்; திருநாவுக்கரசு அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) திருநாவுக்கரசை அவையை விட்டு வெளியேற்றுகிறேன். மார்ஷல், திருநாவுக்கரசை அவையை விட்டு அப்புறப்படுத்தவும், (குறுக்கீடு) மற்ற உறுப்பினர்களெல்லாம் உட்காருங்கள். திருநாவுக்கரசை அவையை விட்டு காவலர்கள் அப்புறப்படுத்தவும்.

## 4. விதி 120-ன் கீழ் உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று நீக்கிவைக்கப்பெறுதல்

*(அ) உறுப்பினரர் திரு. எஸ். திரருநாவுக்கரசு பேரவைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு பேரவைப் பணிகளினின்று நீக்கிவைக்கப்பெறுதல்*

*முற்பகல் 11.15*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திருநாவுக்கரசு இந்தப் பேரவையின் கூட்டத் தொடரிலேயே ஒன்றுக்கு இரண்டு முறை

வெளியேற்றப்பட்டிருக்கிறார். இரண்டாவது முறை வெளியேற்றப் பட்டபோது கூட நான் பெருந்தன்மையோடு விட்டு விட்டேன்.

இது மூன்றாவது முறையும் அவர் செய்கிற வரம்பு மீறிய செயல். எனவே, அவரை இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் பேரவையை விட்டு வெளியேற்ற உத்தரவிடுகிறேன்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்).

### 3. சிறப்புக் கவனஈர்ப்பு— தொடர்ச்சி

ஈரோட்டில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். சிலையைக் காவல்துறையினர் கைப்பற்றியுள்ளது குறித்து- -தொடர்ச்சி

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு.எஸ்.டி.சோமசுந்தரம்:* மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே பேசுகிறபொழுது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் களங்கம் விளைவிக்கின்ற வகையில் அவர் சிறைச்சாலைக்கே செல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்.

அரசியல் தலைவராக இருக்கிறவர்கள், சிறைச்சாலைக்கே செல்லவில்லை என்று சொல்வது, அவர் எத்தனை முறை எத்தனையோ போராட்டங்களில் கலந்து கொண்டு இன்று அல்ல, நீண்ட பல காலமாக அரசியலிலிருந்து, அவர் போராட்டங்களில் கலந்து சிறை சென்றிருக்கிறார் என்பதை விட்டுவிட்டு, அவர் இந்த அவைக்குத் தவறான கருத்து ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்.

மற்றொன்றைச் சொல்கிறபொழுது, கட் -அவுட் என்று சொல்கிறார். கட்-அவுட்டுக்கெல்லாம் அனுமதி வாங்கவில்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கட்-அவுட்டுக்கெல்லாம் அனுமதி வாங்கினார்களா, வாங்கவில்லையா என்பதைப்பற்றிக் காவல் துறையினர் அவர்களுக்கு அந்தப் பர்மிஷனைத் தருகிறார்களா, தரவில்லையா, எந்தக் காரணத்தைக் கொண்டு வாங்கவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இன்னொன்றை நான் செய்தித் தாளில் இன்றைக்குப் பார்த்தேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், புரட்சித் தலைவர் ஜெயிலுக்குப் போகவில்லை என்று சொல்வதில் நீங்கள் குறுக்கிட்டது சரி. மற்றதற்கெல்லாம் முதலமைச்சரவர்கள் பதில் சொல்லுவார்கள். (குறுக்கீடு) அதற்கு முதலமைச்சரவர்கள் பதில் சொல்ல இருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.